# 'திட்டங்களை உருவாக்க ராஜ்யங்களுக்கு உரிமை வேண்டும்: அண்ணா யோசனை'

Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
இதழ் 68
தான் 889

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 7 முஹறம் 9 வியாழக்கிழமை [20-4-67]

சென்னை, ஏப்ரல் 19

'ராஜ்யங்கள் தமது சொந்த அபிவிருத்தித்திட்டங்களைத் தாமே தயாரிப்பதற்கான உரிமை அவற்றுக்கு இருக்கவேண்டும்' என தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. அண்ணாதுரை மேலும் தெரிவிததுள்ளதாவது:-

தேசிய நலனுக்கான திட்டங்களை வரைவதில் திட்டக் கமிஷன் இப்போது வைத்திருக்கும் உரிமையைத்தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம். ஆனால் ராஜ்யங்களின் அபிவிருத்தித்திட்டங்களுக்கான வாய்ப்புகள் சம்பந்தப்பட்ட திட்டங்களைத் தயாரிக்குமுரிமை அந்தராஜ்யங்களிடமே இருப்பது நல்லதாக இருக்கும்.'

மத்திய ராஜ்யங்களுக்கு இடையில் நல்லுறவை ஆலோசனை, விவாதங்கள் மூலம் வலுப்படுத்திக் கொள்ளலாமெனவும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

20 சதிவழக்கு எதிரிகளுடன்

# ஞானசீகதேரோ, உடுகம சுப்ரீம்கோர்ட்டில் விசாரணை

## "குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுவிட்டன"

### கொழும்பு பிரதம நீதிபதி தீர்ப்பு

கொழும்பு, புதன்

வண. ஞானசிகதேரோ, முன்னாள் இலங்கை இராணுவதளபதி மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகம உட்பட புரட்சிச் சதிவழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 22 எதிரிகளையும் சுப்ரீம்கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு கொழும்பு பிரதம நீதவான் திரு. பி. ஜி. எஸ். டேவிட் இன்று உத்தரவிட்டார்.

எதிரிகள் தாம் சிங்களம் பேசும் ஜூரர்களின் முன்னிலையில்விசாரிக்கப்படவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகவும் மந்திரிகள் சிலரையும் இடதுசாரித் தலைவர்கள் சிலரையும் கொலை செய்யத் திட்டமிட்டதாகவும் குற்றம்சாட்டி வண. ஞானசீகதேரோ, முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகம உட்பட 22 பேர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு 'பிளாச்ஸ்டாப்' வீதியிலுள்ள கடற்படைத் தலைமைக் காரியாலயத்திலமைந்த நீதிமன்றத்தில் கொழும்பு பிரதம நீதிபதி திரு. பி. ஜி எஸ். டேவிட் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

விசாரணை முடிவில் 22 எதிரிகளையும் சுப்ரீம்கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு, வழக்கை நீதவான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர்.

[2-ம் பக்கம் பார்க்க]

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

தான் வேண்டுமென்று! நீங்கள் கேளுங்கள்!

ஈழவள நாட்டிலே எங்குமே கிடைக்கும்!!

## சாதி ஒழிப்புக்கு நகரசபைகளின் ஒத்துழைப்பு

சென்னை, புதன்

சாதி வித்தியாசங்களை ஒழிப்பதற்கு நகரசபைகளும் அவைபோன்ற ஸ்தல ஸ்தாபனங்களும் முன்வந்து உழைக்கவேண்டுமென்று தமிழக ஹரிஜன நல மந்திரு திருமதி சத்தியவாணிமுத்து மதுரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினர்.

சாதி ஒழிப்புக்கு வெறும் சட்டங்கள் மட்டும் போதாது. நகரசபைகள் போன்ற ஸ்தலஸ்தாபனங்களும் பிரசார வேலைகளில் ஈடுபடவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## மாவட்டசபை மசோதா: மந்திரிகள் பரிசிலனை

கொழும்பு, புதன்

நேற்று அலரிமாளிகையில் மாவட்டசபை நகல்மசோதா மந்திரிகளால்பரிசீலனைசெய்யப்பட்டதாக அறியப்படுகின்றது. தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் சிலரும் அப்போதுபிரசன்னமாயிருந்ததாகவும் இந்த நகல்மசோதாபற்றி விவாதிக்கப்பட்டபோது மசோதாவின் சில ஷரத்துக்கள் மாற்றப்படவேண்டுமென சில மந்திரிகள்அபிப்பிராயம் தெரிவித்தார்கள் என்றும் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து நகல் மசோதா சில திருத்தங்களுடன் வேறொரு தடவை மந்திரிசபைமுன் சமர்ப்பிக்கப்படுவதென முடிவுசெய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. மாவட்டசபைமசோதா பகிரங்கமாக விவாதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

பீகாரில்

## ஒரு கோடி மக்கள் பஞ்சத்தால் பாதிப்பு

பீகார், ஏப். 19

பீகாரில் ஒரு கோடிக்கும் கூடுதலான மக்கள் வாழும் பிரதேசம் 'பஞ்சநிலை'ப் பிரதேசம் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் அறிவிப்பதையிட்டு தாம் மிகவும் வேதனைப்படுவதாக பீகார் முதன் மந்திரி திரு. மகாமாயா சின்ஹா கவலைத் தெரிவித்துள்ளார்.

இவ்வித அறிவித்தலைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் வாழும் மக்களிடம் குறிப்பிட்ட காலத்துக்கு வரிகள் அறவிடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சநிலை அடைந்துள்ள இப்பகுதி மக்களின் கஷ்டநிலையைப் போக்க எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென முதன் மந்திரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அடினோர் காலமானார்

பொன், ஏப். 19

மேற்கு ஜெர்மனியின் முன்னைநாள் பிரதம மந்திரி டாக்டர் கொன்ராட் அடினோர் அவரது வாசஸ்தலத்தில் இன்று காலமானார்.

டாக்டர் அடினோர் 1963ம் ஆண்டில் தமது பதவியை ராஜினமா செய்யும்வரை தொடர்ந்து 14 வருடங்கள் மேற்கு ஜெர்மனியின் பிரதம மந்திரியாக இருந்துள்ளார். போரில் சிதைந்து போன தமது நாட்டின் பொருளாதாரத்தை மீட்க அவர் பெரிதும் உழைத்தார்.

டாக்டர் அடினோர் காலமாகும்போது அவருக்கு 91 வயது. அவர் பதவியில் இருந்த காலத்தில் ஐரோப்பாவில் மிக முக்கிய மனிதராக விளங்கினர்.

## சிறுமி யார்?

சங்கானை, புதன்

மாதகலில் அனுதரவாக நின்ற சுமார் 8 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றார்.

சீத்தைச் சட்டை அணிந்துள்ள இவர், முடி வெட்டியிருப்பதுடன் பேசமுடியாத ஊமைபோலவும் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எப்பொழுதும் வாக்குறுதிகளைக்காப்பாற்றப் பழகிக் கொள்ளுங்கள். உங்களுடைய உயிரைக் கொடுக்க நேர்ந்தாலும் அதனைக் காப்பாற்றுங்கள். வாக்குறுதிகளை அவசரப்பட்டுக் கொடுத்துவிட்டுபின்னர் மனம் வருந்தாதீர்கள்.

— சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 38

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம்
சித்திரை மீ 7உ 20-4-67)

## டில்லி பொலிஸ் வேலை நிறுத்தம்

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் சென்ற சில தினங்களாகப் பொலிசார் வேலைநிறுத்தம் செய்து வருவதும் இதற்குச்சில அரசியல் கட்சிகள் ஆதரவளித்துவருவதும் இந்திய மக்களுக்கு மட்டுமல்ல ஜனநாயக வாழ்க்கை முறையில் நம்பிக்கை கொண்ட அனைவருக்குமே கவலையளிப்பதாகும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்புள்ள பொலிசாரே பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது கண்டிக்கத் தக்கது. பொலிசாரின் 'வேலை நிறுத்தத்தை' தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என நினைத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்க முன்வந்துள்ள சில அரசியல் கட்சிகளின் செயல் வெறுக்கத் தக்கது; வேதனையளிப்பது.

அந்நிய ஆதிக்கத்திலிருந்து ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவும் விடுதலை பெறுவதற்கு முன்னோடியாக இருந்தது இந்தியா. இன்று இலங்கை உட்பட புதிதாக சுதந்திரம் பெற்ற பல நாடுகளும் ஜனநாயக வாழ்க்கை முறை சிறப்புற நடைபெறுவதற்கு இந்தியாவையே பல விதத்திலும் பின்பற்றி வருகின்றன. ஜனநாயகப் பரீட்சையில் பல பல சோதனைகளையும் தாண்டிச் செல்லும் இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் பொலிசார் வேலைநிறுத்தம் செய்வதும் சில அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவளிப்பதும் சகித்துக் கொள்ளக்கூடியதல்ல. டில்லிப் பொலிசாருக்குக் குறைகள் இருக்கலாம். அவை நியாயமானவையாகவுமிருக்கலாம். அவர்களின் குறைகளை விசாரணை செய்துவரும் 'கமிஷன்' அறிக்கை வரும்வரை பொறுத்திருக்கும்படி உள்நாட்டு மந்திரி சவான் கூறியதைப் பொலிசார் ஏற்றிருக்க வேண்டும்.

பொறுமையில்லாமலும் பொறுப்பற்ற முறையிலும் நடந்துகொண்டுள்ள டில்லிப் பொலிசார் விஷயத்தில் இந்திய அரசாங்கம் தயவு தாட்சண்யம் பார்ப்பதற்கு இடமில்லை; இதை எதிர்பார்க்கவும் முடியாது. பொலிஸ்வேலை நிறுத்தத்திற்கு இந்திய அரசாங்கம் பணிந்து கொடுத்தால், இந்தியா தவிர்ந்த இதர ஜனநாயக நாடுகளிலும் இது ஒரு வியாதியாகப் பரவி அந்நாடுகளின் பாதுகாப்புக்குமே ஆபத்தாகிவிடலாம்.

இந்தியத் தலைநகரில் பொலிசாரே பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கையில இலங்கையில் ஒரு பெரும் தொழிற்சங்கம் விவேகத்துடன் ஒரு முடிவுசெய்திருப்பது பாராட்டுக்குரியது. பங்கீட்டரிசியின் அளவு பாதியாகக்குறைக்கப்பட்டதால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டத்தைச் சமாளிப்பதற்கு 'சம்பள உயர்வு' கோர வேண்டும் என்ற ஒரு பிரேரணையை, ''இதற்கு இது தகுந்த சமயமல்ல'' என்று கூறி இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பிரதிநிதிகள் மகாநாடு நிராகரித்துள்ளது. பாராட்டவேண்டிய முடிவு இது.

ஆசிரியருக்குக் கடிதம்

## மலேரியா தடுப்பு

மலேரியா கூடிய சீக்கிரத்தில் பரவக்கூடிய பகுதிகளில் மேற்பார்வையாளர்கள் மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பரிசோதிப்பது யாவருக்கும் தெரிந்ததே. சென்ற சில ஆண்டுகளிலும் பார்க்க மலேரியா நோய் மீண்டும் பரவுவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று கிருமிநாசினி தெளியாமை. மற்றது மேற்பார்வை செய்யும் நிரந்தரமற்ற ஊழியர்கள் எவ்வித சலுகைகளும் இல்லாமல் [அரசாங்க ஊழியர்களைப் போல்] குறைந்த ஊதியத்துடன் அதிருப்தியுடன் வேலை செய்வது,

பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான ஊழியர்கள் நிரந்தரமாக்கப் படாததும், சம்பள உயர்ச்சி, உடை, பைசிக்கிள் அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் முதலியன இல்லாமலும் கடுமையாக வேலை செய்கின்றனர். இவை யாவும் பல ஆண்டுகட்கு முன்னர் நடைமுறையில் இருந்து வந்தன. ஆனல் சில ஆண்டுகளாக இவை நிறுத்தப்பட்டுவிட்டன. இதுபற்றிக் கடந்த இரு ஆண்டுகளாக எமது சங்கம் சுகாதாரமந்திரியிடமும், மலேரியாத்தடைப் பகுதி அதிகாரியிடமும் தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக ஊழியர்கள் இதைவிட்டு வேறுதொழிலை நாடிக் கொண்டு இவற்றினின்றும் வருடாவருடம் நீங்குகிருர்கள். வெற்றிடத்திற்குப் புது ஊழியர் உடனடியாக நிரப்பப்பட்டதும் அவர்களும் குறைந்த சலுகைகளுடன் சீவிக்க முடியாமல் விட்டு நீங்கவேண்டியிருக்கிறது. இதன் காரணத்தால் இவ்வியக்கம் திறம்பட நடைபெருமல் போகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனித்து நடவடிக்கை எடுத்தால் ஊழியர்கள் திறம்பட வேலை செய்து மலேரியாவை விரட்டியடிக்கலாமென எதிர்பார்க்கலாம்.

கொக்குவில் நா. ச.

### பூசை நடைபெறுகிறது

அனலைதீவு, புதன்

அனலைதீவு தெற்கு முருகமூர்த்திகோவிலிலும் பூசை நடைபெறுவது நிறுத்தப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தி தவறுஎன்றும், அக்கோவிலில் எந்தக்காலத்திலும் பூசை நிறுத்தப்படவில்லையென்றும், மூன்றுகாலப் பூசையும் தவருதுநியமமாய் நடைபெறுகிறதெனவும் கோவில் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வடபகுதி

# இ. போ. ச. வேலைஸ்தலம் அடுத்தமாதத்தில் ஆரம்பம்

## நேர சூசிகைகள் மாற்றப்படும்

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவிலில் நிறுவப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் புதிய வேலைஸ்தலத்தைத் தொழிலாளர் தினமாகிய மே 1-ம் திகதி திறந்துவைப்பதற்காக வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

புதியகட்டடத்தை தேசிய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா திறந்துவைப்பாரென்றும், திறப்புவிழாவில் தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் எம். பி.க்களும், செனட்டர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்களென்றும் அறியப்படுகிறது.

வடபகுதியிலுள்ள பஸ் ஊழியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் இவ்விழாவில் பங்குபற்றி சொற்பொழிவாற்றுவார்களென்றும், இவ்விழாவை சமய ஆசாரப்படி நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் அறியப்படுகிறது.

மே மாதம் 1-ம் திகதி முதல் வடபகுதியிலுள்ள சகல பஸ் சேவைகளின் நேரசூசிகைகள் மாற்றியமைக்கப்படுமென்றும் சில புதிய சேவைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

ஒரு பிரிவு

# தபால் தந்தி ஊழியர் புதிய சங்கம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் கடமையாற்றும் ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கென புதிதாக ஒரு சங்கம் நேற்று உதயமாகியுள்ளது.

தபால்கந்தோரில் பணியாற்றும் டெலிபோன், ரேடியோ வல்லுநர்கள் தங்களுக்கென ஆரம்பித்திருக்கும் புதிய சங்கத்திற்கு 'டெலிபோன் - ரேடியோ வல்லுநர்கள் சங்கம்' எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

இவர்கள் முன்பு தபால்-தந்தி ஊழியர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தனர். இப்போது அதிலிருந்து வெளியேறி புதிய சங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

தபால் - தந்தி ஊழியர் சங்கத்திலிருந்து வெளியேறிய 35 ஊழியர்களும் தாங்கள் வெளியேறுவதையிட்டு சங்கத்திற்கு அறிவித்த பின்னரே புதிய சங்கத்தை ஆரம்பித்தனர்.

### ஞானசீக...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

### சரித்திரத்தை மாற்றுவதா

பிரதம நீதவான் தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது:-

'எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கடபட்டுள்ளன. பட்டிகள் அணியும் உத்தியோகத்தர்கள் இப்போதெல்லாம் நாட்டின் சரித்திரத்தை மாற்றி அமைத்துவிடலாமென எண்ணிவிடுகிருர்கள். ஆனல் அவர்களது சரித்திரம்தான் மாற்றியமைக்கப்பட்டுவிடுகிறது.

இந்தச்சதிக்கு உடந்தையாகச் சில அரசியல் சக்திகள் மறைமுகமாக வேலை செய்திருக்கின்றன என்பது தெளிவாகியுள்ளது. தமது அரசியல்நோக்கத்தையடைவதற்காகச் சிலர் இந்த அப்பாவிகளைக் கருவிகளாகப் பயன்படுத்தியிருக்கிருர்கள்'

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் ஞானசீகதேரோ பற்றிக்குறிப்பிட்டுஅவர் ஒருமத குருவல்ல 'அரசியல் குரு' என தாம் குறிப்பிடவிரும்புவதாகத் தெரிவித்தார்.

சதி எதிரிகளை பிணையில் விடுவதற்கு அனுமதிவழங்க மறுத்த மாஜிஸ்டிரேட் இவர்களது சதிக்கு ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய [illegible] திறை என எடுத்துக் கூறினர்.

### சம்பள உயர்வு பிரேரணை சங்கம் நிராகரித்தது

கொழும்பு, புதன்

அரிசிவெட்டுச் சம்பந்தமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச்சமாளிக்கும்பொருட்டு மேலதிக சம்பளம் வழங்கவேண்டுமென்றபிரேரணை இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் அதிகப்படியான வாக்குகளால் நிராகரிக்கப் பட்டது.

இந்த மகாநாட்டில் 300 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### தீர்த்தோற்சவம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய தீர்த்தோற்சவம் வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. அம்பாள் காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்தத்திற்கு புறப்படுவார்.

### கல்முனையில்...

6,ம்- பக்கத் தொடர்ச்சி]

### 25 வீடுகள் தீக்கிரை

கல்முனை மூன்றும் குறிச்சியில் சுமார் 25 வீடுகள் தீக்கிரையானதாகவும் சாய்ந்தமருது என்ற இடத்தில் சில வீடுகள் சூறையாடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியாகியிருக்கும் குடும்பங்களுக்கு உணவு, உடை மற்றும் உதவிஅளிப்பதற்கு களுவாஞ்சிக்குடி முதலிய இடங்களில் நிதிசேர்க்கப் பட்டு வருகிறது.

[5-ம்கலத்தொடர்ச்சி]

நாவாந்துறை கடற்கரையோரமாக பல வருடங்களாய் நில மீட்புவேலை நடந்துவருகிறது. இங்கே கொண்டுவந்து கொட்டப்படும் குப்பை, கூளத்தினல் துர்நாற்றம் உண்டாகி மக்களுக்கு தீங்கு ஏற்படாமல் கல், மண் முதலியவற்றைக் கொட்டி நிலத்தை ஸ்திரமாக்கிவிட்டால், சோனக தெரு, நாவாந்துறைப் பகுதிகளில் நிலவும் வீட்டுத்தட்டுப்பாட்டை தளர்த்துவதற்கான வீட்டு திட்டங்களை இவ்விடத்தில் அமைக்கலாம்.

ஆணையாளர் ஆட்சியாயிலும் சரி, மாநகரசபை ஆட்சியாயினும் சரி மக்கள்விரும்பி எதிர்பார்ப்பது கரைச்சல் இல்லாத, சுகமான, சௌக்கியமான வாழ்க்கையையே.

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

நேற்று ஓர் ஹோட்டல் முதலாளியுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். இந்த ஹோட்டல் யாழ்ப்பாணம் பெரிய கடை வட்டாரத்துக்குள்இருக்கிறது. ஹோட்டல் சுவர்கள் எல்லாம் புதிய வண்ணப்பூச்சு பூசப்பட்டிருந்தது. தீன் பண்டங்கள் வைக்கும் அலுமாரிகளுக்குகூட புதிய வாணிஷ் அடிக்கப்பட்டிருந்தது. குடிக்கும் தண்ணீர் இங்கே, கழுவுவது அங்கே—என்றெல்லாம்அறிவிப்புகள் தொங்கின.

'என்ன சங்கதி? புதினமாயிருக்கே! முன்பெல்லாம் இப்படியொன்றும் கிடையாதே! புதுவருடத்துக்காகவா இந்த மாற்றமெல்லாம்?' என்று முதலாளியைக் கேட்டேன்.

அப்படியொன்றுமில்லை, மாநகர சபை ஆணையாளர்கள் இப்பொழுது மிகவும் கண்டிப்பாக இருக்கிருர்கள் பொதுமக்கள் வந்து புழங்கும் இடங்கள் சுத்தமாகவும் செம்மையாகவும் இருக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிருர்கள். இப்போதெல்லாம் வைத்திய சுகாதார அதிகாரிகள் வந்து குசினி, கக்கூஸ், கிணறு சாப்பாட்டறை எல்லாவற்றையும் மிக உன்னிப்பாக கவனிக்கிருர்கள். இங்கே சமையல் செய்பவர்களைக்கூட அவர்கள்விட்டுவைக்கவில்லை அவர்கள் மூலம் பொதுமக்களுக்கு தொற்றுநோய் பரவக்கூடுமென்பதற்காகஅவர்கள் எல்லோருக்கும் ஊசி மருந்து கொடுக்கப்போகிருர்களாம்' என்று முதலாளி சொன்னர்.

யாழ்ப்பாண நன்னகரில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் கொள்ளையாயிருக்கின்றன. தெரு திருத்தம், பஸ் நிலையங்கள், பொது ஜன நூல் நிலையம், சாக்கடைகள் என்று இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

தற்சமயம் காங்கேசன் துறை வீதியிலும், கஸ்தூரியார் வீதியிலும் நடந்து செல்லும் பாதசாரிகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே செல்லவேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரிவீதியும் அவ்வண்ணமே. எந்த நேரம் ஆபத்து வருமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

பெரிய கடையில் சாமான் வாங்க வருபவர்கள் தங்கள் கார்களை நிறுத்திவைப்பதற்கு ஒரு தக்க இடம் கிடையாது. இதற்கு அவசியம் ஒரு பரிகாரம் தேடவேண்டும்.

கஸ்தூரியார் தெரு. ஸ்டான்லி வீதி, மூலையிலுள்ள வண்ணுங்குளம் இதற்கு ஒரு சிறந்த ஸ்தானமென்று நான் கருதுகிறேன். மாநகர சபை ஆணையாளர்களும் இதுபற்றி சிந்தித்து வருவதாக அறியக்கிடக்கிறது. இக்குளத்தின் கிழக்குகரை மட்டுமே சலவைத் தொழிலாளரால் உபயோகிக்கப் படுகிறது. குளத்தின் பெரும் பகுதியிலும் அசுத்தநீர் இருந்து சுகாதாரத்தை கெடுக்கிறதேயன்றி அதனல் வேறு ஒருவித பலனுமில்லை. குளத்தின் மேற்கு பகுதியிலிருந்து சரி அரைவாசியை நகரில் தினந்தோறும் வீசப்படும் குப்பை கூளத்தினல் நிரப்பி, பின் மண்ணையும், கல்லையும் போட்டு ஸ்திரப்படுத்திவிட்டால் சுமார் 200, 300 கார்களும் லொறிகளும் நிற்க வசதி கிடைக்கும்.

ஏற்கெனவே கஸ்தூரியார் வீதிப்பக்கமாக சில யார் தூரத்துக்கு குளம் நிரப்பப்பட்டிருப்பதை காணக்கூடியதாயிருக்கிறது. இம்முதல் முயற்சியை முற்ருக்கவேண்டியது அவசியம்.

(4ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொலிஸ் படையில் ஒழுங்கு கட்டுப்பாடு இருப்பது அவசியம்'

## பிரதமர் இந்திரா

புதுடில்லி, ஏப். 19

'பொலிஸ் படையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருப்பது அவசியம். இவை இருந்தால் தான் சிறப்பான சேவை மக்களுக்குக் கிடைக்க முடியும்'

இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திரா தெரிவித்துள்ளார்.

தலைநகரில் நடைபெற்று வரும் பொலிஸ் காரர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமுகமாக அவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக தம்மை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய எதிர்க்கட்சித் தலைவர்களிடம் திருமதி இந்திராமேற்கண்டவாறு எடுத்துக் கூறினார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் அவசர முடிவுகள் நல்லபலனெதுவையும் தரமாட்டாது எனவும் திருமதி இந்திரா எதிர்க்கட்சித் தலைவர்களிடம் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

### 100 பொலிஸ்காரர் நேற்று கைது

இதற்கிடையில் தடை உத்தரவை மீறி நடவடிக்கைகளில் ஈடுபட முயன்றதற்காக நகரின் பல பகுதிகளில் நேற்று சுமார் 100 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள்.

### உதவி பொலிஸ் கமிஷன் அறிவிப்பு

பெரும்பாலான டில்லி பொலிஸ் நிலையங்களில் 99.9 சத விகிதப்பேர் கருமமாற்ற திரும்பியிருப்பதாக உதவி பொலிஸ் கமிஷனர் திரு. பி. என். தாண்டன் தெரிவித்துள்ளார்

இதுவரை 18 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# மதுவிலக்குபற்றி கருணாநிதி

திருச்சி, ஏப்ரல் 20

மற்ற மாநில அரசாங்கங்களின் போக்கு எவ்வாறிருந்த போதிலும் தமிழகத்தில் மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்க தமிழக அரசாங்கம் உறுதி கொண்டிருப்பதாக பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மதுவிலக்குப் பிரச்னையில் மறுபரிசீலனை இராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சீனர்களுக்கெதிராக இந்தோனேஷியாவில் ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, ஏப்ரல் 19

கிழக்கு இந்தோனேஷியாவில் சீனர்களுக்கெதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற இவ்வித ஆர்ப்பாட்டத்தில் சீனர்களுக்குச் சொந்தமான பல கட்டடங்கள் சேதப்படுத்தப் பட்டதாகவும் ஒரு தொழிற்சாலை பெருமளவில்சேதப்படுத்தப் பட்டதாவும தெரிவிக்கப் பட்டது.

# படைபலத்தை பாகிஸ்தான் அதிகரிக்கும்

## அயூப்கான் அறிவிப்பு



ராவல்பிண்டி, ஏப். 19

பாகிஸ்தான் படைபலத்தை அதிகரிக்கும் என்றும் இது இப்போதுள்ள சூழ்நிலையில் தவிர்க்க முடியாதது என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் கூறியுள்ளார்.

முப்படைத் தலைவர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரதம் படைபலத்தை அதிகரித்துள்ளதாகக் குற்றம்சாட்டிய அவர் படைபலத்தில் பாகிஸ்தான் தன்னை வலுப்படுத்த வேண்டியிருப்பதாக எடுத்துக் கூறினார்.

# சமாதானமுயற்சி தொடரும்

வாஷிங்டன், ஏப்ரல் 19

'ஹனோய் நடந்து கொள்ளும் முறைபற்றிநாம் அதிகம் பொருட்படுத்தாமல் நமது வியட்னாமில் சமாதான முயற்சியைத் தொடர்ந்து செய்து வருவோம்'. என அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமெரிக்கா இவ்வித நோக்கம் கொண்டிருந்த போதிலும் வியட்னாமில் தோல்வியடைந்து விட அது விரும்பவில்லை எனவும் அவர் எடுத்துக் கூறினார்,

# 'மாநிலங்களிடம் அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும்'

## சுப்பாராவ் வற்புறுத்தல்

புதுடில்லி, ஏப்ரல் 19

யுத்த காலத்தில்தான் மத்திய அரசாங்கத்துக்கு அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும். மற்ற சமயங்களில் மாநில அரசாங்கங்களுக்குத்தான் அதிக அதிகாரம் இருக்கவேண்டும். அரசியல் சட்டத்தில் இப்படித்தான்குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில்எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் முன்னாள் பிரதம நீதிபதி சுப்பாராவ் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வழக்கறிஞர் கருத்தரங்கு ஒன்றைத் தொடக்கிவைத்துப்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

சில மாநிலங்களில் எதிர்க்கட்சியினர் அரசாங்கம் அமைத்திருப்பதால் மத்திய அரசாங்கம் மாநிலஅரசாங்க உறவுகளுக்கு குந்தகம் ஏற்படாது. அரசியல் சட்டம் ஒழுங்காக அமுல் நடத்தப்பட்டால் கருத்து வேறுபாடுகள்ஏற்படவழியில்லை. மோதலும் ஏற்படாது. இதற்காக சட்டசபை, நிர்வாகத்துறை நீதிமன்றத்துறை ஆகியவற்றில் உள்ளவர்களும், ஜனாதிபதியும் அவர்களுக்கு அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரம்புகளுக்குள் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

பல்வேறு மாநிலங்களில் எதிர்க்கட்சியினர் அரசாங்கம் அமைத்திருப்பதால் தற்பொழுது எல்லா அரசாங்கங்களின் ஒத்துழைப்பு மூலமே நாம் வெற்றிபெற முடியும். கட்சி வேறுபாடின்றி மாநில பிரச்னைகளைத் தீர்க்க முன்வரவேண்டும்.

# ராஜாஜி உடல்நிலை

சென்னை, ஏப்ரல் 19

ராஜாஜியின் உடல்நிலை அபிவிருத்தியடைந்து வருவதாக அவரைக்கவனித்து வரும் டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

# காங்கிரஸ்காரருக்கு மொரார்ஜி எச்சரிக்கை

அகமதாபாத், ஏப். 19

'காங்கிரஸ் காரர்களே திருந்தி விடுங்கள். இல்லையேல் பொதுமக்களிடம் கல்லடி படுவீர்கள்' என்று பாரத உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

குஜராத் மாநில காங்கிரஸ் கமிட்டி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு மொரார்ஜி தேசாய் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'காங்கிரஸ் காரர்கள் ஒன்றுபட்டு கட்சியின் ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டும் அல்லது நாம் அழிந்து விடுவோம்.

காங்கிரஸ் காரர்களிடையே பிளவுகள் ஏற்பட்டிருப்பது வேதனையைத் தருகிறது. பிளவுதான் தோல்விக்குக் காரணம்.

காங்கிரஸ்காரர்கள், காலை வாரிவிடுவதை விட்டு கட்சியின் பலத்தை அதிகரிக்கப்பாடுபட வேண்டும்.

ராஜாஜியைச் சந்திப்பதற்கு யாரும் அனுமதிக்கப் படவில்லை.

யாழ். நூதனசாலையில்

# உயிரியல் பொருள்கள் மூலையில் ஒதுங்கின

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு நேற்றுக் காலை சென்ற ஆசிரியர்களும் மாணவர்களும் அங்கு உயிரியல் பொருட்களைக்காணாது ஏமாற்றமடைந்தனர். ஒவ்வொரு அறையாக அவர்கள் தேடிச் சென்றும் உயிரியல் பொருட்கள் கண்ணில் படவில்லை.

நூதனசாலையில் மேலிடத்தின் உத்தரவைத் தொடர்ந்து உயிரியல் பொருள்கள் மறைவான ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. உயிரியல் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அறையில் கந்தரோடை புதைபொருளாராய்ச்சிப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இனிமேல் நூதனசாலை இருப்பதும் சரி, இல்லாதிருப்பதும் சரி என விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள விஞ்ஞான வகுப்பு மாணவர்களுக்கு, நூதனசாலையிலுள்ள உயிரியல் பொருட்கள் பெரும் பயனளித்ததென்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிரியல் பொருட்களை அகற்றவேண்டும் என்ற பிரச்னை எழுந்தபோது, யாழ்ப்பாணத்திலுள்ள சில கல்லூரிகள், உயிரியல் பொருட்களை தங்கள் கல்லூரி விஞ்ஞான கூடத்திற்குத் தருமாறு கேட்டிருந்தன ஆனல் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை. இன்று அதே உயிரியல் பொருட்கள் நூதனசாலையில் உள்ள ஒரு இருட்டறையில் கட்டாயத்தின் பேரில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# 'தமிழரசு காரியாலயத்துக்கு மின்சாரவசதி வேண்டும்'

## தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

பருத்தித்துறையிலுள்ள தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயத்துக்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென நகரசபைத் தலைவரை வற்புறுத்தும் தீர்மானமொன்று பருத்தித்துறை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

வழக்கறிஞர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

1. பருத்தித்துறை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையின் வருடாந்த மகாநாட்டை இம்மாதம் 26-ம் திகதி பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடத்துவது.

2. வல்வையில் நடைபெற்ற பொலிஸ் தாக்குதலைப் பற்றி கண்டனம் தெரிவித்து பிரதம மந்திரியை உடனே கமிஷன் நியமிக்குமாறு கோருவது.

# தீவுப்பகுதிக்கு புதிய காரியாதிகாரி

நாரந்தனை, புதன்

தீவுப் பகுதி காரியாதிகாரியாக கடமையாற்றிய திரு. பற்றிக் இடமாற்றலாகி சென்ற பின் சாலியாகவிருந்த இடத்திற்கு தீவுப் பகுதி புதிய காரியாதிகாரியாக திரு. விஜய கலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# யுதாண்டின் நம்பிக்கை

கராச்சி, ஏப். 19

வியட்னாமில் சமாதானத்தை நிலை பெறச் செய்வதற்கு தாம் தெரிவித்துள்ள யோசனைகளுக்கு தாம விஜயம் மேற்கொண்டிருந்த நாடுகளில் நல்ல ஆதரவு இருந்ததாக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இங்கு தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகப் பொதுப்படையான முறையில் பாரதத்தில் தாம் தங்கியிருந்தபோது அங்குள்ள தலைவர்களுடன் பேசியதாகவும் அவர் கூறினார்.

# விவசாயப் படை தெரிவில்

## காரியாதிகாரி ஆலோசனை

சுழிபுரம், புதன்

எமது நாட்டில் இன்றுஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைத் தடுக்கும் நோக்கமாகவே அரசாங்கத்தால் ஒரு விவசாயப்படை திரட்டப்படுகின்றது. இப்படையில் பணியாற்ற உடல் ஆற்றலும், மனஆற்றலும் உள்ளவர்களே தேவை. என சுழிபுரம் கிராமசபைக் கந்தோரில் நடைபெற்ற விவசாயப்படை நேர்முகத் தெரிவின்முன் பேசிய வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு. ந. மாணிக்கநடராசா குறிப்பிட்டார்.

இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் படையில் சேர்வதற்காக சமூகம் கொடுத்திருந்தனர். திரு. மாணிக்கநடராசா தொடர்ந்து மேலும் பேசுகையில் விரைவில் குருஞகலை, புத்தளம், பதுளை ஆகிய இடங்களில் காடு வெட்டுதல். நிலம் ஒப்பரவு செய்தல் போன்ற வேலையும் வவுனியா, பதவியாப் பகுதியில் குளம் வெட்டுதல், வாய்க்கால் திருத்துதல் போன்ற வேலைகளும் நடைபெறவிருக்கின்றன. அரசாங்கம் உணவு, உடை, வீடு, ஆறுமாதங்களுக்குச் சம்பளம் ஆகியன வழங்கி ஊக்குவிக்க முடிவுசெய்துள்ளது. எமது வாலிபர்கள் காற்சட்டை உத்தியோகமேகத்தைக் கைவிட்டுவிட வேண்டும். தற்பொழுது விவசாயம் செய்யும் வாய்ப்பு எமது வாலிபர்களுக்குக் கிடைத்துள்ளது. இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்-சிங்கள நல்லுறவை ஏற்படுத்தும் புதுவருடம்'

சாவகச்சேரி, புதன்

"இந்நாட்டில் சிங்கள, தமிழ் மக்கள் புத்தாண்டு விழாவை ஒன்ருகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய தொன்ருகும். இக் கொண்டாட்டம் இருசாராருக்குமிடையில் தேசிய ஒருமைப்பாட்டையும், கலாச்சாரத்தையும் வளர்க்கும் ஓர் திருநாளாக அமையவேண்டுமென்பதே எமது விருப்பம்."

சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தத்தாண்டு விழாவின்போது மாஜிஸ்திரேட் திரு, கே. வி. விக்னராஜா தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினூர்.

அவர் தொடர்த்து பேசுகையில் 'நம்நாட்டில் தற்போது தீயசெயல்கள் அதிகரிப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனுல் நாடும் மக்களும் நலிவடையக்கூடிய சத்தர்ப்பம் ஏற்படலாம். எனவேமக்கள் அனைவரும் தீச்செயல்களை விட்டு நாட்டிற்கும் மக்களுக்கும் பயன்தரக்கூடிய உணவு உற்பத்தியில்இறங் மாறு கேட்டுக் கொள்கின்றேன்' என்ருர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

பொலிசாரின் உதவியுடன் தமிழ் - சிங்களபுத்தாண்டைக் கொட்டாடுவது பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தக்கூடிய தொன்ருகும் மற்றைய விழாக்களிலும் தமிழ் சிங்களமக்கள் கொண்டாடும் இப் புத்தாண்டுவிழா மேன்மையுடைய தொன்று. சாவகச்சேரியைப் பொறுத்தமட்டில் இங்குள்ள பொலிஸ் அதிபர் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தியிருக்கின்ருர் என்றே கூறவேண்டும். இந்நிலைமை ஏனைய பட்டினங்களில் இல்லாமை கவலைக்குரியதொன்ருகும். அண்மையில் வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவங்களைப் பார்க்குப்போது இதற்குமாருகவே சொல்லத் தோன்றுகிறது. இங்குள்ள பொலிஸ் அதிபர் பொதுமக்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும்போது இம் முறை ஏனைய பட்டினங்களில் ஏன் செயல்படுத்த முடியாதிருக்கிறது. பொலிஸ் தலைமைப் பீடம்இதுபற்றி ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைஎடுக்க வேண்டும்."

தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை உட்படப் பலர் பேசினர்.

இவ்விழாவின்போது சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. எல்.விஜய திலகா தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். வாணவேடிக்கைகள், கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆதியனவும் நடைபெற்றன. இப்போட்டியில் வெற்றிபெற்ருேருக்கு மாஜிஸ்திரேட் திரு. விக்னராஜா பரிசில்களை வழங்கினூர்

# இலவச பாலில் வால்பேத்தைகுஞ்சுகள்

யாழ்ப்பாணம். வியா.

பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் இலவச பாலில் வால்பேத்தைக் குஞ்சுகள் இருப்பதைக்கண்டு புத்தூர் கிராமத்தில் பெற்ருர்கள் கவலையடைந்துள்ளனர்.

புத்தூரிலுள்ள வாதரவத்தைக் கிராமத்தில், குழந்தைகளுக்கான இலவச பால்விநியோகத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் பாலில் வால்ப்பேத்தைக் குஞ்சுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெற்ருேர்கள் பால் வாங்குதை நிறுத்திவிட்டனர்

வால்பேத்தை குஞ்சுகள் கலந்த பாலே தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுப்பதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்குப்படியும், அப்பகுதி மக்கள் மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

சங்கானையில்

## திருக்குறள் மாநாடு

சங்கானை, புதன்

தமிழ் மறைக்கழகத்தின் பதினுன்காவது திருக்குறள் மாநாடு இம்முறை சங்கானையில் கொண்டாடப்பட இருக்கின்றது. சங்கானை இந்துவாலிபர் மன்றத்தின் ஆதரவில் மேமாதம் 22,23, 24-ம் தேதிகளில் மிகச்சிறப்பாகவிழாவை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

முதலாம் நாள் விழாவில் ஏட்டுச்சுவடி ஊர்வலம், கவியரங்கம் முதலிய நிகழ்ச்சிகளும், இரண்டாம் நாள் விழாவில் சமயக் கருத்தரங்கும் மூன்ரும் நாள் விழாவில் வள்ளுவர் எக்கொள்கையினர்? என்ற தலைப்பில் பட்டி மன்றமும் விசேட அங்கங்களான நிகழ்ச்சிகளாகும். ஒவ்வொரு நாளும் கலையரங்கில் விசேட இசை, நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இதற்கான ஒழுங்குகளை பொதுச் செயலாளர் திரு. மு. சிவானந்தம் மேற்கொண்டுள்ளார்.

மாநாட்டையொட்டி திருக்குறள் மனனப் போட்டியும் பேச்சுப் போட்டியும் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்படவிருக்கின்றது. சங்கானைச் சிவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் க. மயில்வாகனம் இப்போட்டிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரென பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## திருடியவருக்கு 3 மாத சிறை

சாவகச்சேரி, புதன்

கிளிநொச்சி 4-ம் வாய்க்காலைச் சேர்ந்த ருஜூவின் மனைவியான லட்சுமி என்பவருக்கு உரிமையான சுமார் 600 ரூபா பெறுமதியான காதோலை, தங்கச் சங்கிலி, ரொக்கப்பணம் ரூபா 50 ஆகியவற்றை எஸ். குழந்தைவேலு, ஆர். சீனி, கே. சிதம்பரம் ஆகிய மூவரும் திருடியதாக கிளிநொச்சிப்பொலிசாரால்தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது 2-ம், 3-ம் எதிரிகளுக்கெதிராகச் சாட்சியங்கள் இல்லாமையால் அவ்விருவரையும் விடுதலைசெய்து முதல் எதிரி அந்நகைகளை விற்றக் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு 3 மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

வண்ணை அரசடி விநாயகர் ஆலய வீதியில் நடைபெறும் யாழ்ப்பாண ரஸிகரஞ்சனசபா இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

5-30 நாதசுரம் - திரு. வி ஏ. பாலகிருஷ்ணன், திரு. வி. ஏ. ராதாகிருஷ்ணன். தவில்—திரு. என். முருகானந்தம், ஆர். பாலகிருஷ்ணன், 6-45 கோஷ்டிகானம் செல்விகள் வசந்தராணி சுப்பிரமணியம், ஜெயகுமாரி சண்முகநாதன், ரஞ்சனுராசா, புவனம்பிகை செல்வத்துரை, நவஞானம் நவரட்ணம், ஜெயராணி இராசலிங்கம். 7-00 வேணுகானம்—திரு. கே. அருளானந்தம். 8-00 தலைமையுரை. 8-15 பாட்டு—திரு. பி. சந்திரசேகரம், 9-30 நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள்— 'ஏழிசையாய் இசையப்பனுய்' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். பாட்டு—ஸ்ரீ எஸ். செல்வராஜ், ஸ்ரீ கே. குருஸ்வாமி, வயலின்—ஸ்ரீ எஸ். சோமஸ்கந்தசர்மா, மிருதங்கம்—ஸ்ரீ ரி. ஜெயசுந்தரம்.

## உணவுப் பொருள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வணிகர் கழக காரியதரிசி திரு. முத்துக்குமாரு வட இலங்கையில் உணவுப் பொட்கள் பற்ருக்குறை சம்பந்தமாகவும் அவற்றை நீக்குவதற்கான வழிவகைகள் பற்றியும் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவை சந்தித்துப் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

## நோயாளர் கஷ்டம்

நாரந்தனை, புதன்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக மாவட்டவைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்காததால் இங்குள்ளநோயாளர்கள் பெரிதும் கஸ்டமடைகிருர்கள்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

யாழ் மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சமூகஜோதி சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றது. காரியதரிசியின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்பின்னர் முதலியார் சி. முத்துத்தம்பி, டாக்டர் வி. ரி. பசுபதி, திரு. ஆர். எம். ஜெயரத்தினம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம், உபதலைவர்கள் முதலியார் சி. முத்துத்தம்பி, டாக்டர் வி. ரி. பசுபதி, திரு. ஈ. பி. இராசையா, டாக்டர் டபிள்யூ. சிவகுருநாதன், தனுதிகாரி திரு. மு. தம்பிஐயா, காரியதரிசி திரு. த. துரைசிங்கம். பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

❀ ❀ ❀

சாவகச்சேரி, புதன்

கைதடி - நாவற்குழி கோவிலாக்கண்டி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 15-ந் திகதி நிலையமண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். கந்தையா, காரியதரிசி: திரு. பொ. சரவணபவான், தனுதிகாரி: திரு. ச. கார்த்திகேசு. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## வைத்திய அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மெடிக்கல் சுப்ரிண்டனுக டாக்டர் தருமரத்தினம் நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமாக ஒரு 'மெடிக்கல் சுப்ரிண்டனே' நியமிக்கவேண்டுமென ஆஸ்பத்திரிக் கமிட்டி கடந்த வாரம் சுகாதார அமைச்சருக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பியிருந்தது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனுவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்கசால் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்விப் பத்திர விளம்பரம்

**இலங்கை போக்கு வரத்துச் சபை, யாழ்ப்பாணம்**

1,500 தொழிலாளர்களைக் கொண்ட கோண்டாவில் புதிய இ. போ. ச. டிப்போவிலும், 750 தொழிலாளர்கள் வேலைசெய்யும் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிலும் சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் இ. போ. ச. யாழ். பிரதேச முகாமையாளரால் (ஒட்டிய உறையில்) 15-5-67ம் திகதிக்குமுன் ஏற்றுக்கொள்ளப்படும்.

மனுக்கள் அனுப்ப விரும்புவோர் இ. போ. ச. யாழ். பிரதேச காரியாலயத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடிய ரூபா 10 - பிணைப்பணம் கட்டி தேவையான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 1743

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி நடித்த
**காக்கும் கரங்கள்**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி நடித்த
**ஆனந்தி**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 2 காட்சிகள்
போயா தினங்களில் 3 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி நடித்த
**சம்சாரம்**

**REGAL - JAFFNA**
Catherine Deneuve
&
Ian Hendry
in
**REPULSION**
Time: 4-15, 7-00 9-45 p. m.


## 'கவலை, பாகுபாடுகளை ஒழிப்பது விளையாட்டுக்கள்'

### —வவனியா எம். பி.

தண்ணீரூற்று, புதன்

''விளையாட்டுகள், கவலைகளை ஒழிப்பன. புத்தாண்டு தினத்திலே நமது கவலைகள் வித்தியாசங்களை எல்லாம் மறந்து நாம் ஒரே குடும்பமாக இன்பமாகப் பொழுது போக்குவதற்கு உதவியாக இம்மாபெரும் விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்த கழகத்தை பாராட்ட வேண்டும்.''

தண்ணீரூற்று - முள்ளியவளை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரின் 3-வது வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியானந்தா விளையாட்டரங்கில், கழகத் தலைவர் திரு. செ. குமாரசிங்கம் தலைமையில் இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தேசியக் கொடியையும், வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு. வ. பொன்னம்பலம் கழகக் கொடியையும் ஏற்றி வைத்தனர். கழக அமைப்புக் காரியதரிசி திரு. ஏ. புஷ்பராசா வரவேற்புரை நிகழ்த்தினர். விளையாட்டுப் பகுதி காரியதரிசி திரு. ஏ. எஸ் குணரத்தினம் நன்றி கூறினர். திருமதி தா. சிவசிதம்பரம் பரிசுகளை வழங்கினர்.

போட்டி முடிவுகள் வருமாறு:

5 மைல் மரதன் ஓட்டம்: சி. சரவணமுத்து [தங்கப் பதக்கம்], சி. இராசபுத்திரன், அ. மனுவேற்பிள்ளை.

வண்டிச் சவாரி: கா. குகராசா [தங்கப் பதக்கம்], பொ. விசுவலிங்கம், வ. வேலுப்பிள்ளை.

20 மைல் சைக்கிள் ஓட்டம்: அ. ஆசீர்வாதம் [றலி சைக்கிள்], டா. அரியட், இ. தியோப்பிள்ளை.

100 மீற்றர் - ஆண்கள்: என். உத்தமபுத்திரன், டி. அரியரத்தினம், பி. தியாகராசா.

80 மீற்றர் - பெண்கள்: எஸ். கைலேஸ்வரி, எஸ். புனிதவதி, எஸ். சொர்ணேஸ்வரி.

400 மீற்றர் - ஆண்கள் எஸ். தேவராசா, கே. பாலசுந்தரம், எஸ். சோமபாலன்.

சாக்கோட்டம்: எஸ். ரவீந்திரராசா, கே. ரவீந்திரன், வி. பாஸ்கரநாதன்.

100 மீற்றர் - நடை: எஸ். செல்லையா, சி. சிதம்பரப்பிள்ளை, சி. விஞசித்தம்பி

முட்டியுடைத்தல்: எஸ். புனிதவதி.

இருவர் சைக்கிள் சவாரி: அ. மனுவேல்பிள்ளை, எம். வின்சலாஸ், க பரஞ்சோதி, க. துரைராசா, எஸ். சிவராசா, வி. கனகசுந்தரம்.

கிடுகு பின்னல்: எஸ். மகேஸ்வரி, கே. கமலசோதி, எஸ். விமலாதேவி.

குண்டெறிதல்: ஏ. ஆலோசியஸ், எஸ். தேவராசா, வி. பாலச்சந்திரன்.

பலூன் உடைத்தல்: இ. வேந்தர்கோன், எஸ். செல்வரத்தினம், ம. சிவலிங்கம்.

சறுக்குமரம் ஏறுதல்: ஏ. ஜெபின்ரென்சில்.

தடையோட்டம்; எஸ். சொர்ணபாலன், எஸ். உமாமகேஸ்வரன், எஸ். லோகநாதன்.

காவடி ஆட்டம்: மோகநாதன், சுவேந்திரநாதன்.

விநோத உடை: க. தேவலிங்கம், பரமானந்தம், சொர்ணேஸ்வரி.

சிறந்த குழந்தை: கிட்டினன் லலிதா, இராசையா ஸ்ரீதரன்.

4x400 - அஞ்சலோட்டம்; முல்லைத்தீவு ஐ. வி. கழகம், தண்ணீரூற்று ச. ச. நிலையம், அம்பலவன் பொக்கணை கி. மு. ச.

சுருட்டுப் பற்றுதல் சி. சிதம்பரப்பிள்ளை, எஸ். செல்லையா, எஸ். செல்லத்தம்பி.

400 மீற்றர்-சாரணர்: வி. பாஸ்கரநாதன், ரி. சிற்சபேசன், க. சிவானந்தன்.

சைக்கிள் மெது ஓட்டம்: கே. பகாப், எஸ். மகாலிங்கம், பி. திருநாவுக்கரசு.

கயிறிழுத்தல்: ஆண்கள்: முல்லைத்தீவு ஐ. வி. கழகம் பெண்: மணமாகாதவர்குழு.

உத்தியோகத்தவர் நிகழ்ச்சி: எம். பத்மநாதன். வேலுப்பிள்ளை, பற்குணம்.

## கைப்பந்தாட்ட போட்டிமுடிவு

ஊர்காவற்றுறை, புதன்

தீவுப்பகுதி எம். பி, திரு. நவரத்தினம் வெற்றிக் கேடயத்திற்காக புளியங்கூடல் மகாமாரி சன சமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் புதுவருட தினத்தன்று புளியங்கூடலில் நடைபெற்றது.

நாரந்தனைக் கோஷ்டியினருக்கும், ஊர்காவற்றுறைக் கோஷ்டியினருக்கு மிடையே நடைபெற்ற இப்போட்டியில் இரு ஆட்டங்களிலும் நாரந்தனைக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். நவரத்தினம் வெற்றிக்கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது.

---

## சென். மேரீஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் உதைபந்தாட்டச்சங்கத்தல் நடாதப் பட்டுவரும் லீக் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் .ஏ, பிரிவு விளையாட்டுக்களில் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் 'சம்பியன்' ஸ்தானத்தை அடைவதற்கான வாய்ப்பைப்பெற்றுள்ளது.

கிறீன்பீல்ட், அரியாலை குருநகர்யுனைற்றட், ஒலிம்பிக், ஜொலிஸ்டார், சென். அன்ரனிஸ் ஆகிய கழகங்களை சென்மேரிஸ் வெற்றியிட்டியது.

நாவாந்துறை சென்மேரிஸ் 'பி பிரிவு குறுப் சம்பியன் ஸ்தானத்தை அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

— —

## தண்ணீர் கஷ்டம்

சுழிபுரம், புதன்

காரைநகர் மக்கள் தமக்கேற்பட்டுள்ள தண்ணீர் கஷ்டத்தை உடன் நிவிர்த்தியாக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். குடிதண்ணீர் இல்லாது மக்கள் படும் கஷ்டத்தை விளக்கி ஒரு நீண்ட மகஜரை பாராளுமன்றப் பிரதிநிதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.


## வரிவிளம்பரம்

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


## பிரெஞ்சுப் பிரதமர் ரஷ்யா செல்வார்

பாரிஸ், ஏப்ரல் 19

பிரெஞ்சு பிரதமர் திரு. பொம்பிடோ வரும் ஜூலை மாதத்தில் மாஸ்கோசெல்லவிருக்கிறார். ஐரோப்பிய நல்லுறவு சமாதான சகவாழ்வு ஆகியவற்றை வலுப்படுத்தவே தாம் ரஷ்ய விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக திரு. பொம்பிடோ தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி டீகோல் விரைவில் போலந்து செல்லவிருக்கிறார்.


**'கஸ்தூரிமோதகய'**




**இழந்த வாலிபத்தைத் திரும்பத் தரும் சஞ்சீவி**

இளமையிலேயே முதுமை அடைந்தது போன்ற உணர்ச்சி, வாலிபர்களுக்கும் மணமானவர்களுக்கும் ஏற்படும் பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, கனவிலும், மூத்திரத்துடனும் பலஹீனமடைதல், பயம், வெட்கம், வாழ்க்கையில் வெறுப்பு, பற்பல மூத்திராசய வியாதிகள், கை—கால் நடுக்கம், கெட்ட கனவுகள், பசியின்மை ஆகிய வியாதிகளைப் போக்கி, உடல் பலத்தையும் வீரியத்தையும், இளமை உணர்ச்சியையும் திரும்பத்தரும் சஞ்சீவி.

பத்தியம் இல்லை.

விலை ஒரு றுத்தல் ரூ. 15-00
அரை " ரூ. 8-00
தபால் செலவு வேறு.

N. B.

இத்துடன் ''விட்டால் லேகியம்'' என்ற மருந்தையும் இரவு மட்டும் பாவித்து வந்தால் மலச்சிக்கலை அடியோடு மாற்றுவதுடன், இம் மருந்தின் பலனைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

விலை—1 4 றுத்தல் ரூ. 2-50

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ, 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ், 51, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ் 69, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால
80, புதுச்செட்டித் தெரு.
கொழும்பு - 13.



**5-வது வெற்றி வாரம்**

**தீவொளி** [நுவரெலியா] **கிங்ஸ்லி** [கொழும்பு]

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **விஜிதா** [ஹட்டன்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

**ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி**
**மனோகர், அசோகன், வசந்தா,**
**தங்கவேலு, மனோரமா, கருணாநிதி**
மற்றும் பலர் நடிக்கும்

# இரு வல்லவர்கள்


## ''பொலிஸார் - பொதுமக்கள் நல்லுறவு அவசியம்''

ஊர்காவற்றுறை, புதன்

பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட இந்து-பௌத்த புத்தாண்டு விழாவைச் சென்ற வியாழக்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிசார் கொண்டாடினர்,

ஊர்காவற்றுறைப் பொலிஸ் மைதானத்தில் தேசீயக்கொடியை, ஊர்காவற்றுறைப் பட்டினசபைத் தலைவர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து விழா ஆரம்பமானது.

தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். விஞயகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினமும், அவரது பாரியார் திருமதி நவரத்தினமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். வேலணைக் கிராமசபைத் தலைவர், கிராமசேவகர்கள் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிபர் திரு. கே. கார்த்திகேசு விழாக்கொண்டாடுவதன் நோக்கத்தையும், பொலிசார்- பொதுமக்கள் நல்லுறவையும் எடுத்துரைத்தார். தீவுப்பகுதி எம். பி. உரை நிகழ்த்தினர்.

தேசிய அரசாங்கத்தின் ஒரு புதிரான இந்த விழா இன, மத, பேதமற்ற சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் எடுத்துக் காட்டுகிறது எனக்கூறி விழாவின் காரணகர்த்தாவான பொலிஸ் அதிபர் திரு. கார்த்திகேசுவைப் பாராட்டினர். ''பொதுமக்கள் பொலிஸாரைத் தமது பாதுகாவலராக நடத்தவேண்டும். பொலிஸார் பொதுமக்களைத் தமது எஜமானர்கள் எனக்கருதிக் கடமையாற்ற வேண்டும். இரு சாரபினரிடத்திலும் நல்லுறவு மலர வேண்டும்'' என்றார். அரசாங்க சேவைகளில் அமர்ந்த நாம் பொதுஜனங்களின்கருத்தை அறிந்து சேவையைத் திருப்தியாகச் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். எனக் காரியாதிகாரி திரு. விஞயகலிங்கம் குறிப்பிட்டார். திருமதி நவரத்தினம் விளையாட்டு வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். இன்ஸ்பெக்டர் திரு. கார்த்திகேசு நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியின் அயலவர் நாம்; ஆனால்அங்கு போவதில்லை

## சரசாலை கொலை வழக்கில் பெண் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

''நாங்கள் எதிரியின் அயல்வீட்டுக்காரர்கள். ஒன்பது வருட காலமாக அங்கு வசித்து வருகிறோம். இந்த ஒன்பது வருட காலத்தில் ஒருக்காலும் எதிரி வீட்டிற்கு நான் போகவில்லை. எதிரியுடன் நாங்கள் கோபமில்லை.

சரசாலை கொலை வழக்கில் எதிரியின் சார்பில் ஆஜரான பரிஸ்டர் எம். சிவானந்தன் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சியமளித்த 38 வயதான முத்துத்தம்பி மனைவி பாக்கியம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 19-ந் திகதி சரசாலையில் கந்தையா சிவகுரு என்பவரை செல்லத்துரை பேரம்பலம் என்பவர் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் பரிஸ்டர் எம். சிவானந்தன் புறக்டர்களான எஸ். கே. திரவியநாயகம், வி. கனகசபை, வி. செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி சார்பில் அட்வகேட் ரி. தம்பித்துரை புறக்டர்களான ஆர். டி. சிவகுரு, சி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடனும், சாவகச்சேரிப் பொலிசாரின் உதவியுடனும் ஆஜரானார்.

பாக்கியம்சாட்சியமளித்த போது கூறியதாவது:

எனது வீடு, எதிரி, இறந்தவர் ஆகியோரின் ஒழுங்கையில் உண்டு. சம்பவம் நடந்த தினம் பிற்பகல் 2-30 மணிக்கு நமசிவாயம் சிவப்பிரகாசத்துடனும், எனது மகனுடனும் நெற்சூடு வைத்துக்கொண்டிருந்தோம். மாலை 5-30 மணிக்கு வீட்டிற்கு வடக்குப் பக்கத்தில் 'ஐயோ' என்ற சத்தம் கேட்டது. நான் போகவில்லை. சிவப்பிரகாசம் போனார். அவர் திரும்பி வரவில்லை. அங்கு என்ன நடந்ததென்று தெரியாது. மறுநாள் பொலிஸுக்கு வாக்குமூலமளித்தேன்.

குறுக்குவிசாரணையின் போது சாட்சி கூறியதாவது:

சாட்சியமளித்த தருமலிங்கத்தை எனக்குத் தெரியும். அவர் என் மூத்த சகோதரியின் மகன். சிவப்பிரகாசம் என் உறவினர். கந்தசாமி தருமலிங்கத்தின் தகப்பனார்.

வழக்கறிஞர்: எத்தனை வருடமாக அங்கு வசிக்கிறீர்?- 9 வருடமாக.

வழக்கறிஞர்: நீரும் எதிரியின் மனைவியும் எப்பொழுதாவது சண்டை பிடித்ததுண்டா?- இல்லை.

வழ: கந்தசாமி எதிரியின் சகோதரரா?- அவர் வேறு தாரம், இவர் வேறு தாரம்.

வழ: எதிரியின் தந்தை எதிரிக்குக் கூடிய சொத்துக் கொடுத்திருக்கிறார்?- எனக்கு அதுபற்றித் தெரியாது.

வழ: கந்தசாமி உமது சகோதரியை மணந்தவரா?- ஆம். அவர்இறந்துவிட்டார்.

சரசாலை கிராமசேவகர் திரு. கே. பேரம்பலம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் நண்பகல் நான் இறந்தவருடைய வீட்டிற்குப்போய் அவருக்கும் அவர் மகள்சரஸ்வதிக்கும் கட்டளை கொடுத்தேன். அந்த வழக்கில் வழக்காளி எதிரியான பேரம்பலம்தான். 14ந்தேதி எதிரியின் மகள் கெங்காதேவிக்கும் ஒரு கட்டளை கொடுத்திருக்கிறேன். கொலை நடந்த தினம் மாலை 5.30மணிக்கு எதிரி பேரம்பலம், பிள்ளைகளுடன் வந்து முறைப்பாடு கொடுத்தார். இரவு 9.30 மணிக்கு கொலை நடந்ததை அறிந்தேன்.

மேல் விசாரணை மே மாதம் 2ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# 'தாஷ்கண்ட் ஒப்பந்தம் செயல்பட ஈரான் உதவலாம்'

## இந்திய வெளியுறவு மந்திரி கருத்து

தெஹ்ரான், ஏப். 19

ஈரான் மன்னருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை பயனுள்ளதாகவும் சுமுகமாகவும் அமைந்ததாக பாரத வெளியுறவு மந்திரி திரு. சக்ளா தெரிவித்தார்.

நிருபர்களுக்களித்த பேட்டியொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தாஷ்கண்ட் ஒப்பந்தத்தை செயல் படுத்தச் செய்வதற்கு ஈரான் பாகிஸ்தானுடன் தொடர்பு கொண்டு முயற்சி மேற்கொள்ளமுடியுமென்றும் சமாதான ரீதியிலாவ ஒரு முயற்சியாக இதைச் செய்யலாமெனவும் அவர் எடுத்துக் கூறினார்.

வியட்னாம் பிரச்னை பற்றி அவர் தெரிவிக்கையில் இந்தப் பிரச்னையை சம்பந்தப்பட்ட சார்பினர் மகாநாட்டு மேசையில் கூடி தீர்வு காண்பதே சிறந்த வழியாக அமையும் எனக் கூறினார்.


வல்வை

# முத்துமாரி அம்மன் கோவில்

நிகழும் பிலவங்க ஞூ சித்திரை மீ 11-ந் திகதி திங்கட்கிழமை [24-4-1967] மேற்படி கோவில் தீர்த்தோற்சவம் நடைபெறும். அன்று பூரண சந்திர கிரகணம் இருப்பதால் அம்மன் காலை 6 மணிக்குச் சமுத்திர தீர்த்தத்திற்குப் புறப்பட்டு பகல் 12 மணிக்குள் கோவிலுக்கு வந்து சேரும்.

இரவு கிரகணத்தின் மேல் கொடி இறக்கும் உற்சவம் நடைபெறும்.

இங்ஙனம்

வ. வ. இராமசாமிப்பிள்ளை

[அம்மன் கோவில் மணியம்]

வல்வெட்டித்துறை 1744


# கல்முனையில் நிலைமை சீரடைகிறது

கல்முனை, புதன்

கல்முனையில் படிப்படியாக நிலைமை சீரடைந்துவருகிறது. பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த சிலர் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். கல்முனையில் பொலிசார் தொடர்ந்து ரோந்துப் பாதுகாவலில் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் இரண்டொரு தினங்களில் பூரண அமைதியேற்பட்டு பழைய நிலைக்கு வந்துவிடுமென பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

நேற்று மாலை பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம், மட்டக்களப்பு முதல் எம். பி திரு. செ. இராசதுரை, கல்முனை எம். பி. கேட்முதலியார் எம். எஸ். காரியப்பர், நிந்தாவூர் எம். பி. யும் உதவி மந்திரியுமான எம். எம். முஸ்தபா, செனட்டர் எம். மாணிக்கம், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புப் பிரமுகர்களில் ஒருவரான திரு. சாம் தம்பிமுத்து ஆகியோர் ஒரு மகாநாடுகூடி கல்முனைப் பகுதியில் மீண்டும் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கும் சில தினங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களால் ஏற்பட்ட மனக்கசப்பை நீக்குவதற்கும் மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் பற்றி ஆராய்ந்தனர். மக்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்கிகள்பற்றி இந்த மகாநாட்டில் சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. தொடர்ந்தும் இவர்கள் இன்றுகூடி மேற்கொண்டு ஆராயவிருக்கின்றனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

# கலகத்தை அடக்குவதற்கு அரசியல் தடைஇருந்ததா?

சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான கலகத்தை உடனடியாகவே பொலிஸார் அடக்கியிருக்கலாமென்றும் ஆனால் அரசியல் தலையீடு காரணமாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியாமல் போனதென்றும் கூறப்படுகிறது. அரசாங்க அதிபரும் மற்றும் அதிகாரிகளும் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதுதான் நிலைமை மோசமடைந்ததற்குக் காரணம் என்று செனட்டர் மாணிக்கம் கருத்துத்தெரிவித்தார். இக்கலகத்தினால் வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக நிவாரண உதவியளிக்கவேண்டுமென்றும் செனட்டர் மாணிக்கம் கூறினார்.

# இந்துமாமன்றத்தின் 12 வது ஆண்டு விழா

## மட்டக்களப்பில் நடைபெறுகிறது

மட்டக்களப்பு, புதன்

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 12-வது ஆண்டு விழா இம்மாதம் 23-ம் திகதி மட்டக்களப்பு கல்லடி உப்போடை விபுலானந்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிற்பகல் 3-30-க்கு சுவாமி விபுலானந்த அடிகளின் சமாதியில் அஞ்சலிசெலுத்தப்பட்டு விழா ஆரம்பமாகும். 3-45-க்கு ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தா கொடியேற்றி வைப்பார்.

மாலை 4 மணிக்கு நடராஜாநந்த அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டம் இந்து மாமன்றத் தலைவர் சைவசிகாமணி பொன். ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும். அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திருமதி க. ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி பரஞ்சோதி பாக்கியராஜா, திரு க. நடராஜன் ஆகியோர் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள். பின்னர்கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## விவசாயப்பகுதியின் புதிய முயற்சி

சங்கானை புதன்

அரசினர் உபஉணவுப் பொருட்களை அபிவிருத்தி செய்ய ஊக்கமளிக்கும் இவ்வேளையில் சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தினர் மல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம். வெள்ளைப்பூடு ஆகியவற்றின் விசேடவிதைகளை வரவழைத்துள்ளனர். இவ்விதைகள் வலி-மேற்குப் பகுதியில் ஆர்வமுள்ள கமக்காரர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு பரிசீலனை செய்ய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்புதிய முறைமுயற்சி பலனைக் கொடுக்குமேயானால் ஓர் அளவில் பற்றுக்குறையை நீக்குவதற்கு ஏதுவாகஅமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருடன் பிடிபட்டான்

உடுவில், புதன்

கொக்குவில் வாசியான இரத்தினம் ஜீவரத்தினம் என்னும் நபரை சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த போலிஸ் கான்ஸ்டபிள்கள் குமாரசிங்கம், புண்ணியவம்ச ஆகியோர் கைது செய்துள்ளனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான தூண்டாமணி வழக்கு உட்பட திருடப்பட்டதாகக் கூறப்படும் வேறு பல பொருட்களும் இவரிடம் காணப்பட்டதாம்.

## இவர்களுக்கு அரசியல் தடை

கொழும்பு, புதன்.

கூ. மொ. வி. ஊழியர்கள் அரசியலில் பங்குபற்றக் கூடாதென்பதை அரசாங்கம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் காரணமாக பொதுத் தேர்தலிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் ஊழியர்கள் பங்கு பற்றக் கூடாதெனவும் அரசியல் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சாகித்திய தின நிகழ்ச்சிகள்

கொழும்பு, புதன்

சாகித்தியதின வைபவங்களின் முக்கிய நிகழ்ச்சிகள் இம்முறை வித்தியோதய பல்கலைக்கழக மண்டபத்தில் செப்டம்பர் மாதம் 10,11ம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கஅதிபரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், வியா.

வட இலங்கை உணவு தானிய மொத்த வியாபாரிகள், இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் இன்றுகாலை 9-30மணிக்கு அரசாங்க அதிபரை சந்தித்து உணவு விஷயம்சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கிறார்கள்.

இவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பிலிருந்து அகில இலங்கை வணிகர் சங்கத்தின் காரியதர்சியும் அவருடைய உதவியாளரும் வருகிறார்கள்.

இன்று மாலை 3 மணிக்கு மலாயா கபே மேல்மாடியில் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது.

## 'திட்டங்களை . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்போதைக்குத் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருப்பதையே தாம் விரும்புவதாக அபிப்பிராயம் தெரிவித்த அவர் சீன ஆக்கிரமிப்பு பாரத நாட்டு மக்களிடையே ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்திவிட்டதெனத் தெரிவித்தார்.

## எண்ணைநிரப்ப செல்லும் பஸ்கள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு எண்ணை நிரப்புவதற்காக எண்ணை நிலையங்களுக்குச் செல்லும் பஸ்வண்டிகள் தினமும் அதிகரித்து வருவதாகவும் இதனால் பிரயாணிகள் தொடர்ந்து கஷ்டப்படுவதாகவும் இ. போ. ச அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்வில்லையாம்,

யாழ். பஸ் நிலையத்திலேயே எண்ணை அடிப்பதற்கான ஒழுங்குகள் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பல மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனத்தெரியவருகிறது.

பஸ் வண்டிகளுக்கு எண்ணைஅடிப்பதற்குபிரத்தியேகமாக நேரம் ஒதுக்கப்படவில்லையெனவும் பஸ் வண்டிகள் சேவையிலிடப்படும் நேரத்திலேயே இவ்வேலையும் செய்யப்படவேண்டுமென்ற கட்டுப்பாட்டின் காரணமாகவே இந்நிலைமை தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிகிறது.

## எம்.ஜீ.ஆர். படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்

சென்னை, ஏப்19.

நடிகரும் தமிழ்நாடு சட்டசபை அங்கத்தவருமான எம்.ஜி.ராமச்சந்திரன் இம்மாதம் 21-ம்திகதி படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார். துப்பாக்கியால் சுடப்பட்டபின்னர் இவர் முதல் தடவையாக 'அரசகட்டளை' படப்பிடிப்பில் வரும்21ம் திகதிகலந்து கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org